
பக்கங்கள் 16+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 06 சனிக்கிழமை 18.01.2025 | அதிர்வு 170

## மட்டக்களப்பு நகர் வாவியில் பெண் ஒருவரின் சடலம் மீட்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகர் வாவியில் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் இன்று 03

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# அரசமைப்பு பற்றிய விடயங்களை கையாளத் தமிழரசில் 7 பேர் குழு!

## அரசின் யோசனையைத் தாமதிக்காது முன்வைக்கப் பகிரங்கக் கோரிக்கை

(கீத பொன்கலன்)

அரசு முன்னெடுக்கும் புதிய உத்தேச அரசமைப்பு விடயங்களைக் கையாள்வதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் ஏழு பேர் கொண்ட குழு ஒன்றைக் கட்சியின் மத்திய குழு இன்று தெரிவு செய்திருக்கின்றது.

அதேசமயம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் புதிய அரசமைப்புக்கான உத்தேச வரைவைத் தாமதிக்காமல் உடனடியாக முன்வைக்குமாறும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு அரசாங்கத்தை வலியுறுத்திக் கோரியிருக்கின்றது. 03



## முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி காலமானார்



இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி ஆஸ்திரேலியா – சிட்னியில் இன்று காலமானார்.

சிவகுமாரன் பசுபதி என்ற இயற்பெயர் கொண்ட சிவா பசுபதி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொழும்பு ஆனந்தா கல்லூரி 02

## ரணில்-சஜித் அணிகள் ஒன்றிணைய கட்சியின் மத்திய செயற்குழு அனுமதி

ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சுகளை முன்னெடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் மத்திய செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் என கட்சி ஆதரவாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரமே இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சு நடத்த வேண்டும் எனக் கட்சியின் முகாமைத்துவக்குழு முடிவெடுத்தது. 02

### மஸ்கெலியாவில்

# எட்டு குடியிருப்புகள் முற்றாகத் தீக்கிரை!

## 27 பேர் தஞ்சம்



(க.கிஷாந்தன்)

மஸ்கெலியா, மவுஸ்ஸாக்கலை தோட்டத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இரவு 11.30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 8 தொழிலாளர் குடியிருப்புகள் முற்றாகத் தீக்கிரையாகியுள்ளன.

இந்தத் தீ விபத்து காரணமாக லயன் தொகுதியில் அமைந்திருந்த 8 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இந்த வீடுகளில் குடியிருந்த 8 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஆண்கள் 7 பேரும், பெண்கள் 5 பேரும், சிறுவர்கள் 5 பேரும் அடங்குகின்றனர்.

வீட்டில் இருந்தவர்கள் கூச்சலிட்டதை அடுத்து அயலவர்கள் ஓடி வந்து தீயை அணைக்க முற்பட்ட போதும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. அதனையடுத்து மஸ்கெலியா பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்தனர். சுமார் 2 மணித்தியாலயங்களுக்குப் பிறகு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டது.

எனினும், 8 வீடுகளில் இருந்த பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் தீக்கிரையாகியுள்ளன.

இந்தத் தீ விபத்தால் லயன் தொகுதியில் அமைந்திருந்த 8 வீடுகள் சேதமடைந்ததுடன் இந்த வீடுகளில் குடியிருந்த 8 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேர் தற்காலிகமாகத் தோட்டத்தின் நூலகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையும் கண்டறியப்படவில்லை எனத் தெரிவிக்கும் மஸ்கெலியா பொலிஸார், ஹட்டன்பொலிஸ்கைரேகை அடையாளப் பிரிவுடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டனர்.





## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ரணில் சஜித்...**

அதற்கு கட்சியின் மத்திய செயற்குழு அனுமதி வழங்கியது.

இதற்கமைய பொது இடமொன்றில் வெகுவிரைவில் பேச்சுகள் ஆரம்பமாகும்." – என்றார்.

**முன்னாள் சட்டமா...**

ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

இலங்கைத் தமிழ் முன்னணி சட்டத்தரணியும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சிவா பசுபதி, அரச வழக்குரைஞர்களின் இயக்குநராகப் பணியாற்றினார்.

1974 முதல் 1975 வரை அரசுத் தலைமை வழக்குரைஞராகவும், பின்னர் அவர் 1975 முதல் 1988 வரை சட்டமா அதிபராகவும் பணியாற்றினார்.

சிவா பசுபதிக்கு 1989 ஆம் ஆண்டு இலங்கையின் இரண்டாவது மிக உயர்ந்த தேசிய விருதான தேசமான்ய பட்டம் வழங்கப்பட்டது.

முன்னாள் இலங்கை அரச தலைமை வழக்குரைஞரும், இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபருமான சிவா பசுபதி ஓய்வுபெற்ற பின்னர் ஆஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்து சிட்னியில் வாழ்ந்து வந்தார்.

2002இல் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கும் இடையில் பேச்சுகள் தொடங்கிய போது, விடுதலைப்புலிகளின் பேச்சுக் குழுவுக்கு உதவவும் ஆலோசனைகளை வழங்கவும் விடுதலைப்புலிகளால் நிறுவப்பட்ட அரசியல் விவகாரக் குழுவுக்கு சிவா பசுபதி சட்ட ஆலோசகராகப் பணியாற்றினார்.

2002 – 2006 காலப் பகுதியில் நோர்வே தலைமையிலான அமைதிப் பேச்சுகளில் அவர் பங்கேற்றார்.

சிவா பசுபதி ஆஸ்திரேலிய மனித உரிமைகள் அமைப்பின் தலைவராகவும், நியூ சவுத் வேல்சு மாநிலத் தமிழ் மூத்தோர் சங்கத்தின் தலைவராகவும் இருந்துள்ளார்.

# தெல்லிப்பழையில் தேசிய தைப்பொங்கல் விழா



(எஸ்.நிதர்ஷன்)

தேசிய தைப்பொங்கல் விழா யாழ். தெல்லிப்பழையில் இன்று நடைபெற்றது.

புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் மற்றும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் இணைந்து 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய தைப்பொங்கல் விழாவை நடத்தியது.

புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவியின் தலைமையில் காலை 7.30 மணிக்கு

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் கோயிலில் சமய வழிபாடுகளுடன் பொங்கல் விழா ஆரம்பமாகி பின்னர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வரை ஆன்மீக விழிப்புணர்வு நடைப்பயணமும், அதனைத் தொடர்ந்து

யூனியன் கல்லூரியில் கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# ஈழ நாடகத்துறையின் பிதாமகருக்கு புகழ் அஞ்சலிகள்!

## ‘குழந்தை’ சண்முகலிங்கனின் மறைவுக்கு சிறீதரன் எம்.பி. இரங்கல்

ஈழத்து நாடகத்துறையின் பிதாமகரும் நாடக அரங்கக் கல்லூரியின் நிறுவுநரும் நாடகப் பேராளுமையான கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கன் ஐயாவின் மறைவு, இந்த மண்ணின் நாடகத் துறையின் பேரிழப்பாகப் பதிவாகியிருக்கின்றது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

”முத்தமிழ்க் கலைகளுள் முதன்மையானதாகப் பார்க்கப்படும் நாடகக் கலையை, ஈழத்துப் பாரம்பரியத்தோடும், கூத்துக் கலை மரபோடும் கட்டிறுக்கமாகப் பிணைத்து அரங்க நாடகத் துறையில் புதுமையும், பேரெழுச்சியும் மிக்க ஈழத்து நாடகப் பாரம்பரியத்தை உருவாக்கிய இவரை, ஈழ நாடகத்துறையின் “பிதாமகர்” எனப் போற்றுதல் சாலப் பொருந்தும்.



ஒரு நடிகராக, நாடக எழுத்தாளராக, நெறியாளராக, பன்மொழிப் புலமையாளராக எனப் பலநிலைப்பட்ட ஆளுமைப் பேரொளியாகத் தனக்கான தனிமனித அடையாளத்தை உருவாக்கிக் கொண்ட குழந்தை ம.சண்முகலிங்கன், நாடக அரங்கக் கல்லூரியை உருவாக்கி, ஈழத்தின் நாடகப் பாரம்பரியத்தை முறைமைப்படுத்தப்பட்ட கல்விப் போதனை ஊடாக அடுத்த தலைமுறைக்குக் கையளிக்க முனைந்ததன் விளைவாக, ஈழத்து நாடகப் பாரம்பரியத்துக்கும் அதனையே தமது துறையாக வரித்துக் கொண்ட நாடக ஆளுமைகள் பலருக்கும் அடையாளம் தந்த கனதிமிக்க கலைப்பணியை செவ்வனே ஆற்றியிருக்கிறார்.

ஒரு ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும், நாடக நெறியாளராகவும் அவரிடத்தே இருந்த கலைப் போதனைப் பண்பு ஈழ நாடகத் துறையின் அடுத்தடுத்த வளர் நிலைக்கு வழிகோலியது என்பதை மறுப்பதற்கில்லை.

அன்னையிட்ட தீ, மண் சுமந்த மேனியர், வேள்வித் தீ, எந்தையும் தாயும், ஆர்கொலோ சதுரர் உள்ளிட்ட அழியாப் புகழ் மிக்க நாடகங்களின் வழியும், தன் உதிரத்தில் உறைந்த நாடகக் கலையை ஊட்டி அவர் உருவாக்கிய அடுத்த சந்ததியின் நாடக ஆளுமைகளின் முகமாகவும் கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கன் தன் மறைவின் பின்னும் இந்த உலகில் ஒளிர்வார். அன்னாருக்கு எம் புகழ் அஞ்சலிகள்!.” - என்றுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மட்டக்களப்பு...**

சனிக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

சடலம் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை என்று மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்லடி பாலத்துக்கு அருகாமையிலுள்ள முனிச் விக்டோரியா நட்புறவு வீதியிலுள்ள வாவிக்கரையில் நீரில் மூழ்கிய நிலையில் சடலம் ஒன்று கரையடைந்த நிலையில் இருப்பதைக் கண்டு பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

**அசரமைப்பு....**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் கூட்டம் இன்று திருகோணமலையில் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றபோது இந்த முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இன்று மாலை கூட்டம் முடிவுற்ற பின்னர் அது பற்றிய விடயங்களைக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஊடகவியலாளர்களுக்கு வெளியிட்டார். அச்சமயம் அருகில் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானமும், நிர்வாகச் செயலாளர் சேவியர் குலநாயகமும் உடனிருந்தனர்.

பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், கட்சியின் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறீதரன், இரா. சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், கி.துரைராஜசிங்கம் மற்றும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் ஆகியோர் கொண்ட எழுவர் குழுவே அரசமைப்பு விடயங்கள் தொடர்பான கட்சியின் நடவடிக்கைகளைக் கையாளும் எனத் தெரிவிக்கப்பட்டது.

புதிய அரசமைப்பு உருவாக்க விடயங்கள் தொடர்பில் தேவைப்படும் சமயங்களில் ஏனைய தமிழ்க் கட்சிகளோடு கலந்துரையாடுவது, இது தொடர்பான அரசின் வரைவுத் திட்டங்களை ஆய்ந்து தீர்மானங்களை எடுத்தல் போன்ற விடயங்களை இந்தக் குழுவே கையாளும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் உள்ளூராட்சி சபைகளுக்கு புதிதாக வேட்புமனுக்களைக் கோரி தேர்தலை நடத்துவதற்கு அரசு தீர்மானித்து இருப்பதால் அதற்கு அமைய வேட்பாளர் நியமனங்களை செய்வதற்குக் கட்சி முடிவு செய்துள்ளது.

ஏற்கனவே கட்சி தேர்ந்துள்ள வேட்பாளர்களுக்கு - அந்தந்த வட்டாரங்களில் அல்லது கட்சியின் பட்டியலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுத் தாக்கல் செய்து இருந்தவர்களுக்கு - அவர்களின் விருப்புக்கு ஏற்ப அந்த இடங்களில் முன்னுரிமை வழங்கப்படும்

அதேசமயம் வெளிநாடு சென்றவர்கள், கட்சியை விட்டு விலகியவர்கள், கட்சியின் ஒழுங்குக் கட்டுப்பாட்டை மீறி நடந்தவர்கள் போன்றோரின் வெற்றிடங்களுக்கு உரிய வேட்பாளர்களைக் கட்சியின் அந்தந்தப் பிரதேசக் கட்டமைப்புகளோடு ஆராய்ந்து உரியவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் இன்றைய கூட்டத்தின் முடிவில் தெரிவிக்கப்பட்டது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# உதவியா? பொறியா?

இரண்டு லட்சம் பீப்பாய்கள் கொள்ளளவு கொண்ட ஏற்றுமதி சார்ந்த பெற்றோலிய சுத்திகரிப்புக் கான அதிநவீன நிலையத்தை அம் பாந்தோட்டையில் நிறுவுவதற்கு சீன சர்வதேச பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துடன் 3.7 பில்லியன் டொலர் களை முதலீடு செய்வதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திட் டுள்ளது.

3.7 பில்லியன் டொலர் என்பது சுமார் ஒரு லட்சத்து பத்தாயிரம் கோடி ரூபாவாகும். இந்த முதலீட்டு வருகை என்பது இலங்கையின் இப்போதைய நெருக்கடிப் பொரு ளாதாரத்தில் முக்கியமான - கணி சமான - தொகையாகும்.

இதே சமயம் நாணய மாற்று வசதி தொடர்பாக சுமார் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் 42 ஆயிரம் கோடி ரூபா) பெறுமதிக்கான கட னுக்குரிய இருதரப்பு நாணய பரி மாற்ற ஒப்பந்தத்தில் இலங்கை மத்திய வங்கியும் சீன மக்கள் வங்கியும் செய்து கொண்டுள்ளன. இது ஏற்கனவே காலாவதியாக இருந்த ஒப்பந்தத்தின் புதுப்பித்த லாகும்.

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, கடந்த 14ஆம் திகதி முதல் நேற்று 17 ஆம் திகதி வரை சீன மக்கள் குடியரசிற்கு மேற்கொண் டிருந்த உத்தியோகபூர்வ விஜயத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார். இந்த விஜயத்தின் போது இலங் கைக்கு உதவும் பல்வேறு திட்டங்க ளுக்கு சீனா இணங்கியிருப்பதான செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, இரு தரப்பினரும் 15 புரிந்து ணர்வு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுளனர்.

பொருளாதார மற்றும் தொழில் நுட்ப ஒத்துழைப்பு, முதலீடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு செயற் பாட்டுக்குழுவை நிறுவுதல், சீனா விற்கு விவசாயப் பொருள்களுக்கான சந்தை அணுகல், ஊடகம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டில் ஒத்துழைப்பு ஆகிய இந்த ஒப்பந்தங்களில், சீன அரசாங்கத்திடமிருந்து இலங்கைக்கு பெருந்தொகை நிதி மானியமாகக் கிட்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை ஜனாதிபதியின் இந்த சீன விஜயத்தின் மூலம் பெருந் தொகை சீன உதவி இலங்கைக்கு கிடைப்பதான ஒரு பிரசாரம் தென் னிலங்கை அரசியலில் முன் வைக் கப்படுகின்றது. இதன் மூலம் இலங் கையின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்துவதற்கான வாய்ப்பு கிட்டி யிருப்பதான செய்தியும் பூடகமாகப் பரப்பப்படுவது உணரத்தக்கதுதான்.

ஆயினும், இலங்கை மோசமான பொருளாதார வீழ்ச்சியில் விழுந்து இருந்த போது, அதற்கான காரண மாகக் கூறப்பட்ட விடயங்களில் முக்கியமானது கடன் வழங்கி, அதன் மூலம் தனது பொறியில் இலங் கையை சீனா விழ வைத்தது என்ற குற்றச்சாட்டுத்தான்.

இப்போதும் சீனாவிடம் இருந்து உதவி, மானியம், நன்கொடை, பெருந்தொகை முதலீடுகள் என்று பல விடயங்கள் கிடைப்பதில் யாருக்கும் ஆட்சேபனை இல்லை. அவை வரவேற்கத்தக்கவைதான். ஆயினும் கடன், கடன் பரிமாற்ற ஒப்பந்தம் என்ற பெயர்களில் பொறி களாக வரக்கூடிய கூடிய திட்டங்கள் குறித்து இலங்கை ஆட்சியாளர்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

மீண்டும் ஒருதடவை இலங்கையை சீனப் பொறிக்குள் மாட்டாமல் - கையைச் சுட்டுக் கொள்ளாமல் - காபந்து பண்ணி கொள்வது ஆட்சி தரப்பின் மிக முக்கிய பொறுப்பாகும்.




# அரசியல் பிரமுகர்களைச் சந்தித்தார் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா!

**(எஸ். நிதர்ஷன்)**

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இலங்கைக்கான இந்திய தூதர் சந்தோஷ் ஜா அரசியல் பிரமுகர்களுடன் முக்கிய சந்திப்பில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாண நகரில் உள்ள தனியார் விடுதியில் நேற்று (17) மாலை இராப்போசனத்துடன் சந்திப்பு இடம்பெற்றது.

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கருணைநாதன் இளங்குமரன், றஜீவன் ஜெயச் சந்திரமூர்த்தி, ஸ்ரீ பவானந்தராஜா உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் உள்ளிட்ட சிலரும் இதில் கலந்து கொண்டனர்.




# பிரித்தானிய நாடாளுமன்றில் ஒலித்த பொங்கல் பாடல்!

பிரித்தானிய தமிழர் பேரவை ஒழுங்கமைத்திருந்த வருடாந்த “தமிழ் மரபுத் திங்கள் மற்றும் தைப் பொங்கல் விழா” கடந்த புதன் கிழமை (15) நடைபெற்றது.

அன்று மாலை வெஸ்ட் மின்ஸ்டரிலுள்ள நாடாளுமன்ற வளாகத்தில் ஆரம்பித்த இவ்விழாவில், இசை, நடனம் மற்றும் பாரம்பரிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இதன் ஓர் அங்கமாக த வொய்ஸ் ஆர்ட் பயிலகத்தின் மாணவர்களால் பாடப்பட்டு வெளியிடப்பட்ட பொங்கல் பாடல் ஒன்றும் பாடப்பட்டது.

இந்தப் பாடலை இராகவி மஹாராஜன், வைஷ்ணபி நிர்மலரோஜன் மற்றும் தேவ்கான் குலசேகரன் ஆகியோர் பாடியிருந்தனர். ‘சக்கரக் கட்டிகள் இடிச்சு...’ என ஆரம்பிக்கும் இந்தப் பாடல் அங்கு குழுமியிருந்தோரின் கரகோஷங்களுடன் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது.




இந்த நிகழ்வில், பிரித்தானியா நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரமுகர்கள், அமைச்சர்கள், கவுன்சிலர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சமூக அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் எனப் பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டனர்.







# சந்நிதியான் ஆச்சிரமத்தில் தெய்வீக இன்னிசை விருந்து

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் இடம்பெறும் வாராந்த நிகழ்வில் இன்றைய தினம் தெய்வீக இன்னிசை கானம் இடம் பெற்றது.

இதில் இசையாசிரியை திருமதி ஜெயபாரதி கௌசிகனின் இசைக் கச்சேரி இடம்பெற்றது. கீபோட் – இசைக் கலாமணி நடேசு செல்வச்சந்திரன், மிருதங்கம் – கலாவித்தகர் ப. விக்னேஸ்வரன், தபேலா – வித்துவான் ம. பிரபா.

இதைவேளை பூநகரி, தெளிகரை பிரதேசத்தை சேர்ந்த பூநகரி மகா வித்தியாலயத்தில் தரம் – 11 இல் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கு சைக்கிள் ஒன்றும், வடமராட்சி பாடசாலை ஒன்றுக்குப் பிறிண்டர்களும் வழங்கிவைக்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர்கள், நிர்வாகிகள், அடியவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.




# ‘திருவள்ளுவர் கலாசார மையம்’ என்று பெயரிடப்பட்ட யாழ். பண்பாட்டு மையம்!

(எஸ். நிதர்ஷன்)

இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்துக்கு ‘திருவள்ளுவர் கலாசார மையம்’ என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

திருவள்ளுவரைக் கௌரவிக்கும் வகையில் இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்று இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இன்று சனிக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதர் சந்தோஷ் ஜா, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சுனில் செனவி, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதர் சாய் முரளி, யாழ். மாநகர ஆணையாளர் கிருஷ்ணேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் 1.6 பில்லியன் ரூபா நிதிப் பங்களிப்புடன் கடந்த 2023 ஆம் ஆண்டு இந்தக் கலாசார மத்திய நிலையம் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.











# சட்டவிரோத மோட்டார் சைக்கிள் செலுத்துவோருக்கு எச்சரிக்கை!

(பாறுக் ஷிஹான் )

காரைதீவு பிரதேச சபைக்கு உட்பட்ட மாவடிப்பள்ளி பகுதியில் மக்கள் போக்குவரத்துக்கு இடையூறாக மோட்டார் சைக்கிள் ஓடுபவர்கள், மது போதையில் வாகனம் செலுத்துபவர்கள், போக்குவரத்து விதிமுறைகள் மீறி வாகனம் செலுத்துபவர்கள், தலைகவசம் அணியாமல் ஓடுபவர்கள் , வாகன அனுமதிப் பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்துவோர் உட்பட சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் அதிரடியாக கைது செய்யப்பட்டுவர் என்று காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். எஸ்.ஜெகத் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் மாவடிப்பள்ளியின் நேற்று வெள்ளிக்கிழமை (17) ஜும்மா தொழுகையைத் தொடர்ந்து பள்ளிவாசலுக்கு வருகை தந்த அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிள்களில் சாகசங்கள், இரவு நேரங்களில் இளைஞர்கள் குழுக்கள் பெரிய சத்தங்களுடன் மோட்டார் சைக்கிள் ஓடுதல் , வீதியில் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு தொந்தரவு ஏற்படுத்தும் விதமாக மோட்டார் சைக்கிள்களை செலுத்துதல் என மோட்டார் சைக்கிள்களில் சாகசங்கள் செய்து மக்களுக்கு இடையூறு விளைவித்து வருகின்றனர் என்று தெரிவித்தார்.

வீதிகளில் கூடி நிற்கும் இளைஞர்கள் சம்பந்தமாகவும் மற்றும் போதைப் பொருள் பாவனை, போதைப் பொருள் விற்பனை செய்பவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் கடுமையான சட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் மேற்படி நபர்களுக்கு எதிராக பள்ளி நிர்வாகத்தால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் பூரண தெளிவு வழங்கினார்.

காரைதீவு பொலிஸ் பிரிவின் மாவடிப்பள்ளி பிரதேசத்திலும் இனி பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். இப்படியான ஆபத்துக்களை விளைவிக்கும் வகையில் செயற்படுவோரைப் போக்குவரத்து பொலிஸார் கண்டால் மோட்டார் சைக்கிளும் பறிமுதல் செய்யப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த விடயங்கள் தொடர்பில் காரைதீவு பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஆர். எஸ். ஜெகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதை அடுத்து , போக்குவரத்து விதிமுறைகள் சம்பந்தமாக இந்தச் சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது.




## மனித உரிமை ஆணைக்குழுவில்

# மட்டக்களப்பு அரச அதிபருக்கு எதிராக விவசாயிகள் முறைப்பாடு

(கனகராசா சரவணன்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் வேளாண்மை அறுவடை செய்வதற்கான திகதி தீர்மானிக்கப்பட்ட நிலையில் தீர்மானிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் முதலாளித்துவ வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு சிலருக்கு அறுவடை செய்ய அரச அதிபர் அனுமதி வழங்கியுள்ளார். இதனால் ஏழை விவசாயிகள் பாதிக் கப்படுகின்றனர் என்று விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அரச அதிபரின் இந்தச் செயற்பாட்டை கண்டித்து அவருக்கு எதிராக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று வெள்ளிக் கிழமை (17) விவசாயிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

மட்டக்களப்பு கோவிந்தன் வீதியிலுள்ள இலங்கை மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்துக்குச் சில விவசாயிகள் சென்று அரச அதிபருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பாக விவசாயிகள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

2024, 2025 பெரும் போக செய்கைக்கான முன்னோடிக் கூட்டம் கச்சேரியில் இடம்பெற்று ஆரம்ப கூட்டம் ஒவ்வொரு பிரதேசத்தில் இடம்பெற்று அதற்கான வேலைத்திட்டம் இடம்பெற்றுது. தற்போது அறுவடைக்குச் சில காலம் இருக்கும் நிலையில் ஒரு சில விவசாயிகளின் நலன்கருதி அரச அதிபர் அவர்கள் முன்கூட்டி அறுவடை செய்வதற்கான அனுமதி வழங்கியுள்ளார்.

இவ்வாறான செயற்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது அவர்கள் யார் என்றால் முதலாளித்துவ வர்க்கம் என்னும் நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர் வேளாண்மையை செய்பவர்கள். அது மட்டுமல்லாது கூடுதலான வெட்டு இயந்திரங்களைக் கொண்டு அறுவடை செய்பவர்களே இவ்வாறான அத்துமீறல் செயற்பாட்டை செய்கின்றனர்.

இவர்கள் விவசாய அமைப்புக்களைச் சார்ந்து பிரதேசத்தின் கமநல அமைப்புக்களின் தலைவர்களாக திட்ட முகாமைத்துவ உப தலைவர்களாக இருந்து கொண்டு இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவது மிலேச் சத்தனமானது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 லச்சம் ஏக்கருக்கு மேலாக வேளாண்மை செய்துவரும் நிலையில் குறிப்பிட்ட ஒரு சிலருக்கு அறுவடை செய்ய அனுமதி கொடுப்பதன் மூலமாக ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.

களத்தில் நின்று விவசாயிகளின் கஷ்ட நஷ்டத்தை பாராத இவர்கள் குளிர் ஊட்டப்பட்ட அறையில் இருந்து கொண்டு - மேசையில் இருந்து எழுதிக் கொண்டு - அனுமதி வழங்குவதை ஒரு காலமும் எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே இதனால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள அநீதிக்கு மனித உரிமை ஆணைக் குழுவில் முறைபாடு செய்துள்ளோம்.- என்றனர்.

இதேவேளை, இது தொடர்பாக அரச அதிபர் திருமதி ஜே.ஜே. முரளிதரன் தெரிவிக்கையில்,

கடந்த 15 ஆம் திகதி விவசாயி ஒருவர் கச்சேரிக்கு வருகைதந்து தான் செய்த வயல் நிலங்கள் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன என்று புகை படங்களை காண்பித்தார்.

கூட்டத்தில் அறுவடை தினமாக ஜனவரி 20 ஆம் திகதி என தீர்மானிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டது. ஆனாலும் அதற்கு ஒரு சில தினங்களுக்கு அறுவடைக்கு அனுமதி தாருங்கள். தமது வேளாண்மை அழிவடையும் நிலையில் உள்ளது. உடனடியாக அறுவடை செய்யாவிட்டால் பாரிய நஷ்டத்தை எதிர் நோக்க வேண்டிவரும் என்று தெரிவித்தார்.

எனவே அனர்த்த நிலைமையைக் கருத்தில் கொண்டு, இதனால் பாரிய நஷ்டம் ஏற்படுமாக இருந்தால், நீங்கள் உங்களுடைய வயலை மட்டும் அறுவடை செய்யலாம். அதுவும் பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச செயலகத்தில் சேவையாற்றும் விவசாய போதனாசிரியர் ஆகியோரின் மேற்பார்வையில் செய்யலாம் என்று தெரிவித்து அனுப்பி வைத்தேன்.

நஷ்ட ஈடு வழங்கினாலும் அது அரசுக்குத் தான் பண நஷ்டம் ஏற்படும். எனவே அவர் ஒருவரது தனிப்பட்ட விடயத்துக்கு அனர்த்த நிலமையை கருத்தில் கொண்டு எடுக்கப்பட்ட முடிவு. இது பொதுவான அறிவித்தல் அல்ல.

விவசாயக் கூட்டத்தல் 20 ஆம் திகதி அறுவடை என்று எடுக்கப்பட்ட தீர்மானம் மாற்றப்படவில்லை. இது தொடர்பாக பல விவசாய அமைப்புக்கள் வந்து இது போன்ற விடயங்கள் எங்களால் பார்வையிட முடியும். இது ஒரு தனிப்பட்ட விடயம் என்பதால் தாங்களுடைய பிரதேசத்தில் இப்படி ஏற்பட்டால் தாங்கள் சென்று பார்த்து செய்வோம். இது தொடர்பாக மாவட்ட செயலகத்துக்கு வந்து முறையிட தேவையில்லை என கூறிச் சென்றனர்.- என்றார்.







# யாழ். முதலீட்டாளர் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் கலந்தாய்வு!

யாழ். மாவட்டத்தில் முதலீட்டாளர்கள் எதிர்காலத்தில் செய்ய இருக்கும் முதலீடுகள், எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரச அதிபர் பிரதீபன் தலையில் நடைபெற்றது.

இதில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, தேசிய நல்லிணக்க நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் விஜித றொகான் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினர்.

# மன்னார் தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் அடம்பனில் நாளை பொங்கல் விழா!

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில், தமிழர் திருநாளாம் தைத்திருநாள் பொங்கல் விழா பண்பாட்டியல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை (19) காலை 9 மணிக்கு மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

மன்னார் தமிழ் சங்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெறவுள்ள குறித்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் சிறப்பு விருந்தினராக அடம்பன் மத்திய மகா வித்தியாலய அதிபர் மை.கிறிஸ்ரியான் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தைத்திருநாள் பொங்கல் விழா பண்பாட்டியல் நிகழ்வின் ஓர் அங்கமாக வரவேற்பு நடனம், கிராமிய நடனம், கவிதை, பேச்சு,குழுப்பாடல், நவீனம் குறியீட்டு நாடகம், கருத்துக்களம் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.





# தென்கிழக்கு பல்கலையில் தைப்பொங்கல் நிகழ்வுகள்

**(பாறுக் ஷிஹான்)**

தைப்பொங்கல் விழா முதன் முறையாக தென் கிழக்கு பல்கலைக்கழகத்தில் வியாழக்கிழமை (16) தென் கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்க அலுவலகத்தில் இடம்பெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஊழியர் சங்க தலைவர் சி.எம். அஹமட் முனாஸ் தலைமையில் பல்கலைக்கழக இந்து ஊழியர்கள் மற்றும் ஏனைய சமயங்களைச் சார்ந்த ஊழியர்கள் பங்குகொண்டிருந்த இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் மற்றும் முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா மற்றும் நூலகர் எம்.எம். றிபாவுடீன் ஆகியோரும் பங்குபற்றினர்.



பிரதிப் பதிவாளர் எஸ். சிவக்குமார், விரிவுரையாளர்கள், சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.எச். நபார், பொறியியலாளர், ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம்.எம்.முகம்மட் காமில் ஊழியர் சங்கத்தின் உயர்மட்ட உறுப்பினர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# முன்பள்ளி மாணவர்களின் சுகாதாரம், போசாக்கு கலந்தாய்வு

(ஏ.எல்.றியாஸ்)

பொத்துவில் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளி மாணவர்களின் சுகாதாரம் மற்றும் போசாக்கு தொடர்பாக அந்தப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் உவைஸ் பாறூக் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொத்துவில் பிரதேசத்திலுள்ள 51 முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், சமூக பல் மருத்துவர் டாக்டர் ஏ.எஸ்.கதாபி, மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ்.அப்துல் மலிக் உள்ளிட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் உளவளத்துணை ஆலோசகர் அயாத்து பாவா அப்துல் சுக்கூர் வளவாளராக கலந்துகொண்டு முன்பள்ளி மாணவர்களின் கல்வி மற்றும் பாதுகாப்பு தொடர்பாக விரிவுரையாற்றினார்.

முன்பள்ளி மாணவர்களின் ஆரோக்கியம், போசாக்கு, வாய் சுகாதாரம் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

பொத்துவில் பிரதேசத்தில் உள்ள சகல முன்பள்ளிகளும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திருட்டுப்போன மோ.சைக்கிள் மீட்பு சந்தேக நபர் ஒருவரும் கைதானார்!

(பாறுக் ஷிஹான்)

ஜனவரி முதல் வாரத்தில் திருடிச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளது. சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சம்மாந்துறை பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புறநகர் பகுதியில் இந்த மாதம் முதல் வாரத்தில் இடம்பெற்றுள்ளது. திருடிச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் உரிமையாளரால் முறைப்பாடும் அன்றைய தினமே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டிற்கமைய விசாரணைகளை மேற்கொண்ட சம்மாந்துறை பொலிஸார் பொத்துவில் பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளுடன் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம். நௌபர் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான பொலி



ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# உணவகத்தின் அடித்தளம் இடிந்து விழுந்ததில் 6 மாணவர்கள் காயமடைந்து ஆஸ்பத்திரியில்

(மஸ்கெலியா, க.கிஷாந்தன்)

கினிகத்தேன நகரில் உள்ள உணவகம் ஒன்று இடிந்து விழுந்ததில் அங்கு உணவருந்திக் கொண்டிருந்த பாடசாலை மாணவர்கள் 6 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இன்று (18) காலை இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்த பாடசாலை மாணவர்கள் கினிகத்தேனை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தரம் 10 இல் கல்வி பயிலும் ஆறு மாணவர்கள், கினிகத்தேன நகருக்கு பிரத்தியேக வகுப்புக்கு வந்திருந்த நிலையில், குறித்த ஹோட்டலுக்கு சென்று உணவருந்தியுள்ளனர்.

அங்கு மாணவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, அவர்கள் தங்கியிருந்த அடித்தளத்தின் தளம் உடைந்து சுமார் 15 அடி சாய்வாக கீழே விழுந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த உணவகம் பாதுகாப்பற்ற முறையில் நிர்மாணிக்கப்பட்டமையால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# புதுக்குடியிருப்பில் வெள்ள அனர்த்தத்தால் பாதித்த விவசாயிகள் தொடர்பில் ஆராய்வு!

## ரவிகரன் எம்.பி. நேரில் விஜயம்

(விஜயரத்தினம் சரவணன் )

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட உடையார்கட்டு, வள்ளிபுனம், தேவிபுரம் பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள் வெள்ள அனர்த்தத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.



இந்த நிலையில் அந்தப் பகுதி கமக்காரஅமைப்புக்களின் அழைப்பை யேற்று பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

அந்தவகையில் உடையார்கட்டு கம நலசேவை நிலையப் பிரிவுக்கு உட்பட்ட, உடையார்கட்டுக் குளத்தின் கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட 1800 ஏக்கர் நெற்பயிர் செய்கையில் பெருமளவான வயல் நிலங்கள் அறுவடைக்காகத் தயாராக இருந்த நிலையில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

அதேபோல் வள்ளிபுனம் இடைக்கட்டுக் குளத்தின் கீழ் செய்கைபண்ணப்பட்ட 175 ஏக்கர் பெரும்போக நெற்செய்கை மற்றும், தேவிபுரம் (அ) பகுதி காளிகோவில் வெளியில் செய்கை பண்ணப்பட்ட 66 ஏக்கர் பெரும்போக நெற்பயிர்ச் செய்கைகளில் பெருமளவான வயல் நிலங்களும் அறுவடைக்குத் தயாரான நிலையில் வெள்ள அனர்த்தத்தால் அழிவடைந்துள்ளன.

இதனால் அப்பகுதி விவசாயிகள் பலத்த இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இந்த நிலையில் தமது பாதிப்பு நிலை தொடர்பில் இதுவரையில் உரிய தரப்பினர்கள் எவரும் வருகைதந்து பார்வையிடவில்லை என விவசாயிகளால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் முறையிட்டனர். வெள்ள அழிவுக்கான நிவாரணங்களைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறும் விவசாயிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த நிலையில் விவசாயிகளின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர், இது தொடர்பிலான கோரிக்கைக் கடிதங்களைத் தம்மிடம் கையளிக்குமாறு விவசாயிகளிடம் கேட்டுக் கொண்டார். உரிய தரப்பினருடன் பேசி விவசாயிகளுக்கு உரிய இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# யாழ். நகைக்கடையில் கொள்ளைச் சம்பவம்; பிரதான சூத்திரதாரி உட்பட நால்வர் கைது!

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் உள்ள நகைக்கடை ஒன்றில் நூதனமான முறையில் பணத்தைக்கொள்ளையிட்டசம்பவத்தின் பிரதான சூத்திரதாரி ஐந்து லட்சம் ரூபா பணத்துடன் கைதுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்கவின் வழிகாட்டலுக்கமைய யாழ்ப்பாண குற்ற விசாரணைப் பொலிஸ் பொறுப்பதிகாரி கலும்பண்டாரா தலைமையிலான குழுவினர் இந்த நபரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து இந்தக் கொள்ளை நடவடிக்கைக்கு உடந்தையாக இருந்த வான் சாரதி உள்ளிட்ட மூவர் கண்டியில் கைது செய்யப்பட்டனர்.



மேலும் இரண்டு சந்தேக நபர்களைத் தேடி யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைக் கடை ஒன்றுக்குச் சென்ற குழுவொன்று பொலிஸ் புலனாய்வு பிரிவு என தெரிவித்து 30 லட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டிருந்தது.

சம்பவம் தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாட்டை தொடர்ந்து கண்காணிப்பு கமராக்களின் உதவியுடன் குற்றவாளிகளை கைது செய்யும் நடவடிக்கையைப் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

இதனடிப்படையில் சுன்னாகம் பகுதியில் நேற்று (17) கைதான பிரதான சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை கண்டியில் இன்று கைதான மூவரையும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்து விசாரணைகளுக்கு பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# மாடுகளை ஏற்றிச் சென்ற லொறி விபத்து: இரு மாடுகள் காயம்; இரு மாடுகள் மாயம்!

## லொறியின் உதவியாளர் படுகாயம்!!

(க.கிஷாந்தன்)

நுவரெலியா ஹட்டன் பிரதான வீதியில் நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் இன்று (18) அதிகாலை மாடுகளை ஏற்றிச் சென்ற லொறி திடீரென ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக விபத்துக்குள்ளானது.

வாகனத்தை கட்டுப்படுத்த முடியாததன் காரணமாகக் கட்டுப்பாட்டை இழந்து மண்மேட்டில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

லொறியின் உதவியாளர் பலத்த காயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெளிமடை பகுதியில் இருந்து நுவரெலியா வழியாக ஹட்டன் பகுதியில் உள்ள பண்ணை ஒன்றுக்கு குறித்த மாடுகளை ஏற்றிச்சென்ற போதே விபத்து நேர்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துக்குள்ளான போது லொறியினுள் 9 மாடுகள் இருந்துள்ளன. அவற்றில் 2 மாடுகளுக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவை அருகில் உள்ள மிருக வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. இரண்டு மாடுகள் மாயமாகியுள்ளன. அவற்றை தேடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் ஐந்து தொன்களுக்கும் குறைவான வாகனங்கள் மாத்திரம் சென்று வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பொலிஸாரும் இணைந்து இந்த வீதியின் போக்குவரத்து தொடர்பில் சாரதிகளுக்கு விழிப்புணர்வூட்டும் ஏராளமான பதாதைகள் வீதியில் இருபுறமும் காட்சிப்படுத்தப்பட்டள்ள போதிலும் சட்டங்களை மீறும் சாரதிகள் இந்த வீதியில் ஐந்து தொன்களுக்கும் அதிக எடையுள்ள வாகனங்களைச் செலுத்துவதன் காரணமாகவே அதிக விபத்துக்கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை, பொலிஸார் மற்றும் பொறுப்பான அதிகாரிகள் இணைந்து நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் கனரக வாகனங்கள் இங்கு செல்லாமல் தடுப்புகளை பலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

# மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் பொலிஸாரால் கைது!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )

மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த சந்தேக நபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு மோட்டார் சைக்கிளையும் சம்மாந்துறை ஊழல் தடுப்பு பிரிவினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நைனாகாடு பாலத்துக்கு அருகில், சம்மாந்துறை ஊழல் தடுப்பு பிரிவினர் கடமையில் இருந்த வேளை, சந்தேகத்துக்கு இடமாகச் சென்ற மோட்டார் சைக்கிளை நிறுத்தி, மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போதே, இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னல்கிராமம் 02 பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய ஒருவரும் மற்றும் மல்கம்பிட்டி நைனாகாடு பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய ஒருவரும் என, 2 சந்தேக நபர்களும் மதுபோதையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதான சந்தேக நபர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட சான்றுப்பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் திங்கட்கிழமை (20) ஒப்படைக்கப்படவுள்ளனர் என்று சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சோதனை நடவடிக்கையானது, சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபரின் வழிகாட்டுதலில், பொலிஸ் நிலைய ஊழல் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஆர்.எம். ரணதுங்க தலைமையில் பொலிஸ் உத்தியோகத்தர்களான சார்ஜன் அநுர, சார்ஜன் வி.டபிள்யூ. அசோக்க, சார்ஜன் டபிள்யூ.ஏ. சரத் உள்ளிட்ட அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டது.

மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# தமிழ் மக்களின் காணி அபகரிப்பு அநுர ஆட்சியிலும் தொடர்கின்றது!

## சாணக்கியன் எம்.பி. காட்டம்

பரம்பரையாக மேய்ச்சல்தரையாகப் பயன்படுத்திவந்த காணிகளை வேறு மாவட்டங்களை சேர்ந்தவர்கள் அபகரிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. எமது கால் நடைகளை மேய்ப்பதில் பெரும் கஸ்டங்களை எதிர் கொள்கின்றோம் என்று மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கெவிளியாமடுவில் உள்ள மேய்ச்சல் தரைகளை கொண்டுள்ள பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கெவிளியாமடுவில் மேய்ச்சல் தரைக் காணிகளில் முன்னெடுக்கப்படும் அத்துமீறிய பயிர்ச்செய்கை மற்றும் குடியேற்றங்கள் தொடர்பில் ஆராயும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தலைமையில் களவிஜயம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதில் பட்டிப்பளை பிரதேச செயலாளர் சுதாகர், உதவிப் பிரதேச செயலாளர், பிரதேச காணி உத்தியோகத்தர், திட்டமிடல் பிரிவு உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், பண்ணையாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கெவிளியாமடுவில் மேய்ச்சல் தரைப் பகுதியில் முன்னெடுக்கப்படும் அத்துமீறிய பயிர்ச்செய்கைகளை பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையிலான குழுவினர் அங்கு பண்ணையாளர்களுடன் கலந்துரையாடினர். அங்கு அத்துமீறிய பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோருடனும் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன.

இங்கு சட்டவிரோத பயிர்ச்செய்கையாளர்களின் அத்துமீறிய செயல்பாடுகள் காரணமாக கால்நடை மேய்ச்சல் தரை அழிக்கப்படுவதாகவும், அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களின் பகுதிக்குள் கால்நடைகள் சென்றால் பண்ணையாளர்களை தாக்குவதாகவும் சிலதைப் பிடித்து பணம் கேட்பதாகவும் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

அத்தோடு வன பாதுகாப்புத் திணைக்களத்தினர் மற்றும் மங்கலகம பொலிஸார் தங்களுக்கு எதிராக நீதிமன்ற வழக்கு தாக்கல்களை செய்வதாகவும், லஞ்சமாக பணம் மற்றும் மதுசாரம் கேட்பதாகவும் பண்ணையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

கால்நடைகளைச் சுருக்கு வைத்து பிடிப்பதாகவும் சில சமயங்களில் கால்நடைகளைக் கொல்கின்றனர் என்றும் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட பண்ணையாளர்கள் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தங்களது கால்நடைகளைக் கொண்டு செல்கின்றனர். தாங்கள் பரம்பரை பரம்பரையாக இந்தப் பகுதியில் கால்நடைகளை மேய்ச்சலுக்குக் கொண்டு வருகின்றனர். கடந்த சில வருடங்களாக இவ்வாறானவர்களின் அத்துமீறிய செயற்பாடுகள் அதிகரித்து இருப்பதாகவும் தெரிவித்தனர்.

பண்ணையாளர்கள் சிறிய கத்தியைக் கையில் வைத்திருந்தாலும் கூட வன பாதுகாப்பு திணைக்களத்தினர் அவர்களைப் பிடித்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்கின்றனர். தங்களுக்கான தற்காலிக கொட்டில்களை கூட அமைப்பதற்கு அனுமதி வழங்குவதில்லை. ஆனால் பெரும்பான்மை சமூகத்தினருக்கு இயந்திரங்களைக் கொண்டு காடுகளை அழிப்பதற்கும் கட்டடங்களை அமைப்பதற்கும் எதுவித தடைகளும் விதிப்பதில்லை எனவும் இதன் போது பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது அப்பகுதியில் அத்துமீறி பயிற்செய்கையில் ஈடுபடும் நபர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் கலந்துரையாடியபோது, தங்களிடம் உரிய ஆவணங்கள் இருப்பதாகவும் அவற்றை வைத்துக் கொண்டு தாங்கள் இந்தப் பகுதியில் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் தெரிவித்தனர்.

இதன்போது பிரதேச செயலாளர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இருவரும் இணைந்து அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களின் ஆவணங்களைப் பரிசீலனை செய்வதற்காக அவற்றை எதிர்வரும் வாரம் கிராம சேவகர்களின் ஊடாக வழங்கி அவற்றை உறுதி செய்ய வேண்டும் என்று பயிர்ச்செய்கையாளர்களிடம் தெரிவிக்கப்பட்டது. பண்ணையாளர்கள் மீது அத்துமீறிய செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடாது எனவும் இதன் போது வலியுறுத்தப்பட்டது.

சட்டவிரோதமாக குடியேறி இருக்கின்றவர்கள் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும். இது மேய்ச்சல் தரையாக அறிவிக்கப்பட வேண்டும். மக்களுக்கு அநுரகுமார திசாநாயக்க அரசு நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும்.

மேய்ச்சல் தரைக்காணியில் முன்னெடுக்கப்படும் அத்துமீறிய செயற்பாடுகளில் இதனை ஒரு முதலாவது சவாலாக எதிர்வரும் வாரத்தில் நாடாளுமன்றத்தில் என்.பி.பி அரசுக்கு முன்பாக நான் முன்வைக்க தயாராக இருக்கின்றேன் என்று இங்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியே இந்த கெவிலியாமடு. இங்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை பெயர் தெரியாதவர்கள் பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்தவர்கள் வந்து அடைத்து விவசாயம் செய்து, கட்டடங்களை அமைத்து பாரிய அளவில் பண்ணைகளாக மாற்றி வருகின்றனர். இவை அனைத்தும் வன பரிபாலன சபைக்குச் சொந்தமான காணிகள்.

இன்று வட கிழக்கில் வன பாதுகாப்பு திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளுக்குள் தமிழ் பண்ணையாளர்கள் மற்றும் தமிழ் விவசாயிகள் சிறிய கத்தியை எடுத்துக்கொண்டு சென்றாலும் கூட உடன

தொடர்ச்சி▼



# தமிழ் மக்களின் காணி அபகரிப்பு அநுர ஆட்சியிலும் தொடர்கின்றது!

தொடர்ச்சி▲

டியாக அவர்களை அழைத்துச் சென்று அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகளை தாக்கல் செய்து பாரிய நெற்குவாரங்களை கொடுக்க வன பாதுகாப்பு திணைக்களம் இந்த பிரதேசத்தில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை தனியார் ஒருவர் யானை வேலி கூட அமைத்து வைத்திருக்கின்றார். இவை மட்டக்களப்பு மாவட்டத்துக்குச் சொந்தமான காணிகள்.

நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட காலத்தில் இருந்து பட்டிப்பளை எல்லையில் இந்தக் காணி அவகரிப்பு இடம் பெற்றுவருகின்றது என்பது தொடர்ச்சியாகப் பேசிக் கொண்டு வந்து விடயங்கள். அந்த நேரத்தில் நாங்கள் வந்து பார்வையிட்டத்தின் பின்பு ஒரு சில விடயங்கள் தடுத்து நிறுத்தப்பட்டாலும் கூட அந்த நேரத்தில் இருந்து பிரதேச மற்றும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர்கள் இந்த விடயத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முழுமையாக மறுத் தார்கள்.

ஏனென்றால் பெரும்பான்மை சமூகத்தினுடைய குடியேற்றத் திட்டங்களை எதிர்ப்பதற்கு அவர்கள் விரும்பவில்லை. இன்று புதிய அரசு வந்திருக்கின்றது. அண்மையில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்திலும் கூட இந்த மேய்ச்சல் தரைக்குள் இவ்வாறான அடாவடித்தனமாக பயிர்கள் செய்வார்களா இருந்தால் கால்நடை வைத்திருக்கின்ற பண்ணை யாளர்கள் அடுத்த கட்டமாக எங்கே போவது.

அநுரகுமார திசாநாயக்கவின் அரசின் கீழ் இந்த விடயங்கள் தொடருமாக இருந்தால் இன்று வடக்கு கிழக்கிலும் சரி இனி இடங்களிலும் சரி அனைத்து மக்களையும் சரிசமமாக பார்த்து செயற்படுவார் என நினைத்து வாக்களித்தாலும்கூட அவருடைய ஆட்சிக் காலத்திலும் இந்த விடயங்கள் தொடர்கின்றன.

சிலர் கூறலாம் அவர் ஆட்சிக்கு வந்து இப்போதுதான் இரண்டு மாதங்கள் அல்லது மூன்று மாதங்கள் என்று. ஆனால் இந்த விடயங்கள் குறித்து மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் பேசப்பட்டு, இந்த விடயம் தொடர்பாக கவனம் செலுத்தி இதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக சொல்லியும் கூட இந்த விடயம் இன்றுவரை அவ் வாறாகவே கண்முன்னாக இருக்கின்றது.

அந்த வகையில் இது உடனடியாக சட்டவிரோதமாக குடியேறி இருக்கின்றவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் இது மேய்ச்சல் தரையாக அறிவிக்கப்பட வேண்டும். அரசாங்கத்தால் போடப்பட்ட யானை வேலிக்கு உள் காணியினை சுத்தப்படுத்தி விவசாயம் செய்கின்றார்கள். யானை வேலி போடுவதன் நோக்கமே இதற்கு மறுபக்கம் வன பாதுகாப்பு திணைக்களத்துக்கு சொந்தம் என்பதனால்.

இந்த யானை வேலைக்கு உட்பகுதியில் வந்து அவர்கள் விவசாயம் செய்திருப்பதால் தாங்களாகவே யானை வேலிகளை அமைத்திருக்கின்றார்கள்.

எமக்கு இங்கே இருக்கின்ற பண்ணையாளர்கள் கூறுகின்றார்கள், இந்தக் காட்டுப் பகுதிக்குள் ஒரு எஸ்கவேட்டர் இயந்திரத்தையும் ஒளித்து வைத்திருப்பதாக. அதனை வைத்து தான் காட்டை ஒதுக்குகிறார்கள். சாதாரணமாக தமிழர்கள் ஒருவர் ஒரு சிறிய கத்தியை காட்டுப்பகுதிக்குள் கொண்டு போக முடியாத நிலையிலே இன்று எஸ்கவேட்டர் இயந்திரத்தின் மூலம் காடுகளை அழித்து பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரையினை இல்லாமல் செய்து காணிகளை அபகரிப்பு செய்கின்றனர். அதுவரை இவர்கள் என்ன பார்த்துக் கொண்டிருக்கின் றார்கள் என்று எமக்கு பாரிய சந்தேகம் இருக்கின் றது.

இந்த விடயம் தொடர்பாக எதிர்வரும் வாரத்தில் நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக நாங்கள் கேள்வி எழுப்பி வன பாதுகாப்பு திணைக்களம் தூங்குகின்றதா என்ற கேள்வியையும் நாங்கள் எழுப்ப வேண்டும்.

பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு வன பாதுகாப்பு திணைக்களத்தின் நீதி ஒரு மாதிரியாக செயற்படுகின்றது.

இங்கே இருப்பவர்கள் மாபியாக்கள். இங்கு இருப்பவர் ஒருவர் கூறுகின்றார் இந்த பகுதியில் தனக்கு பல ஏக்கர் காணிகள் இருப்பதாக. இப்பகுதியில் மாமரம் மற்றும் கொய்யா மரம் போன்றவை பயிரிட்டு இருப்பதாகவும் வயல் செய்வதாகவும் கூறுகின்றார். இவர் அம்பாறையில் இருந்து வந்து இங்கு பயிர் செய் கின்றார்.

இங்கு சிங்களவர்கள் வந்து 10 அல்லது 15 பேர்ச் எடுத்து செய்யவில்லை. இந்த பிரதேசத்தில் காணி மாபியா ஒன்று இயங்கிக் கொண்டு வருகின்றது.

அந்த வகையில் மூன்று மாடி கட்டடம் கூட அமைத்திருக்கின்றார்கள். இந்தக் கட்டடம் அமைக்கும் வரைக்கும் வன பாதுகாப்பு திணைக்களம் என்ன பார்த்துக் கொண்டிருந்தது. அந்த வகையில் உடனடியாக சட்டவிரோதமான செயல்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும்.

மக்களுக்கு அநுரகுமார திசாநாயக்க அரசு நேர்மையாக நடந்து கொள்ளும் அரசு என நம்பிக்கை வருவதாக இருந்தால் இதனை ஒரு முதலாவது சவாலாக எதிர்வரும் வாரத்தில் முன்னெடுக்க வேண்டும்.- என்றார்.

# இந்துத்துவா சக்திகளை அழிக்க விஜய் இண்டியா கூட்டணிக்கு வர வேண்டும்

## செல்வப்பெருந்தகை அழைப்பு



இந்துத்துவா சக்திகளை அழிக்க விரும்பினால் விஜய் இண்டியா கூட்டணிக்குதான் வர வேண்டும் என தமிழ்நாடு காங்கிரஸ் கொமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

முன்னாள் மத்திய அமைச்சரும் தமிழ்நாடு காங்கிரஸ் கொமிட்டியின் முன்னாள் தலைவருமான வாழப்பாடி கே. ராமமூர்த்தி பிறந்த தினத்தை ஒட்டி அவருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட செல்வப்பெருந்தகை செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவரிடம் பல்வேறு கேள்விகளும் எழுப்பப்பட்டன. அதில் விஜய் குறித்த கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், இந்துத்துவா சக்திகளை அழிக்க விரும்பினால் விஜய் இண்டியா கூட்டணிக்குதான் வர வேண்டும் என தெரிவித்தார்.

செல்வப்பெருந்தகை மேலும் கருத்து தெரிவிக்கையில்,

“விஜய் அவருடைய மாநாட்டில் மதவாத சக்திகளுக்கு எதிராக செயல்படுவோம் என்றார். எதை வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் ஒழித்துவிடலாம், ஓரங்கட்டிவிடலாம். ஆனால் இந்துத்துவா சக்திகளை, மதவாத சக்திகளை ஓரங்கட்ட வேண்டும் என்று விஜய் விரும்பினால், இண்டியா கூட்டணிக்கு வருவதே அவருக்கும் நல்லது அவருடைய கொள்கை, கோட்பாட்டுக்கும் நல்லது. இதை நான் யதார்த்தமாக நாட்டின் ஒரு குடிமகனாகச் சொல்கிறேன்.”- என்றார்.

# சின்னத்திரை நடிகர் விபத்தில் உயிரிழப்பு



இந்திய தொலைக்காட்சியின் தொடர் நாடகம் ஒன்றில் நடித்து வரும் அமன் ஜெய்ஷ்வால் வீதி விபத்தொன்றில் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து சம்பவம் நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

நடிகர் அமன், தனது நண்பர் அபிஷேக் மிஸ்ரா என்பவருடன் இரு மோட்டார் சைக்கிளில் நேர்காணல் ஒன்றுக்கு சென்றுள்ளார்.

இதன் போது ஜோகேஸ்வரி நெடுஞ்சாலையில் வைத்து டிபர் ரக வாகனம் ஒனறு மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த நடிகர் அமன், உடனடியாக மீட்கப்பட்டு அங்குள்ள காமா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மருத்துவமனையில் அனுமதி செய்யப்பட்ட அமன், 1 மணிநேரத்திற்குள்ளாக சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

23 வயதாகும் இளம் சீரியல் நடிகரின் மறைவு சின்னத்திரையுலகினர், ரசிகர்கள் இடையே பெரும் சோகத்தினை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நான் தான் எனது மகனைப் பொலிஸாரிடம் பிடித்துக் கொடுத்தேன்: மன்சூர் அலிகான்



பிரபல வில்லன் நடிகர் மன்சூர் அலிகான் தனது மகன் துக்ளக் குறித்து ஊடகங்களுக்கு அளித்த செவ்வி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

அண்மையில் நடிகர் மன்சூர் அலிகானின் மகன் போதை பொருள் வழக்கொன்றில் கைது செய்யப்பட்டார். மெத் எனப்படும் போதைப் பொருளை அவரும் அவரது நண்பர்களும் விற்றதாக ஆதாரங்கள் உறுதியானதை அடுத்து அவரை அதிரடியாக போதை பொருள் தடுப்பு பிரிவினர் கைது செய்தனர்.

இந்நிலையில், தனது மகன் கைது குறித்து செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் மன்சூர் அலிகான் பேசியிருப்பது பலரது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

இதன்போது ‘என்னுடைய மகனை நானே பொலிஸாரிடம் பிடித்துக்கொடுத்தேன். அவர் சிகரெட் பிடிப்பாரா என்று கூட எனக்கு தெரியாது என்பதுதான் உண்மை. அவரை விசாரணைக்காக பொலிஸார் அழைத்துச் சென்றனர்.

அப்போது எனது மகனிடம் தவறு செய்தாயா என்று கேட்டேன். அதற்கு அவர் ஆமாம் என்று கூறினான். உடனே அவரது கன்னத்தில் பளார் என அறைந்தேன் . என்னுடைய மகன் மட்டுமில்லை யார் செய்தாலும் தவறு தவறுதான். இப்போது பள்ளி குழந்தைகள் வரை கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகிவிடுகிறார்கள் “ என்று மன்சூர் அலிகான் தெரிவித்துள்ளார்.





# போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பிலான வாக்கெடுப்பு; பணயக் கைதிகள் நாளை விடுவிக்கப்படும் சாத்தியம்

ஹமாஸுடனான போர் நிறுத்த ஒப்பந்தத்தை இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரவை அங்கீரிப்பதற்கு பரிந்துரைத்துள்ள நிலையில், இந்த ஒப்பந்தம் தொடர்பில் வாக்கெடுப்பு நடத்துவதற்கு அந்த நாட்டு அரசாங்கம் கூடுகிறது.

இந்த ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டால் நாளைய தினம் முதலாவது பணயக் கைதி விடுவிக்கப்படுவார் என எதிர்பார்ப்பதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே எட்டப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமைய நாளை முதல் போர் நிறுத்தம் அமுல்ப்படுத்தப்படும்.

மூன்று கட்டங்களாக அமுல்ப்படுத்தப்படவுள்ள இந்த போர் நிறுத்தத்தின் முதற்கட்டமாக பல பலஸ்தீன கைதிகளை இஸ்ரேல் விடுவித்ததன் பின்னர், 33 பணயக் கைதிகளை ஹமாஸ் தரப்பினர் விடுவிப்பார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல் தொடர்வதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இந்த தாக்குதல்களில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட 116 பேர் கொல்லப்பட்டனர் என ஹமாஸ்தரப்பினரால் நடத்தப்படும் சிவில் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு ஹமாஸ் இணங்கியுள்ளதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் அறிவித்துள்ளது.






# 2500 பேருக்கு ஒரே நேரத்தில் மன்னிப்பு வழங்கினார் பைடன்

கடந்த நவம்பர் 5 ஆம் திகதி நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்ற நிலையில், நாளை மறுதினம் திங்கள்கிழமை பதவியேற்க உள்ளார்.

எனவே தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் தனது அதிகாரத்தை முடிந்தவரை பயன்படுத்தி முக்கிய உத்தரவுகளைப் பிறப்பித்து வருகிறார்.

குற்ற வழக்கில் சிக்கிய தனது மகன் ஹண்டர் பைடனுக்கு பொது மன்னிப்பு வழங்கியமை, ரஷியா மீது கண்டம் விட்டு கண்டம் தாவும் ஏவுகணைகளை பயன்படுத்த உக்ரைனுக்கு அனுமதி கொடுத்தமை உள்ளிட்டவை அதில் அடங்குகின்றன.

இந்நிலையில் பதவிக்காலத்தின் இறுதி நாள்களில் இருக்கும் ஜோ பைடன் நேற்று ஒரே நாளில் 2500 பேருக்கு பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

வன்முறையற்ற சாதாரண போதைப் பொருள் குற்றங்களுக்காக சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட சுமார் 2,500 பேருக்கு தனது சிறப்பு



அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜோ பைடன் பொது மன்னிப்பு வழங்கியுள்ளார். அமெரிக்க வரலாற்றிலேயே ஒரே நாளில் இத்தனை பேருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டமை இதுவே முதல் முறை.

வன்முறையில் ஈடுபடாதபோதிலும் மிகக் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவதாக பைடன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்

முன்னதாக அமெரிக்காவின் மத்திய நீதிமன்றங்களால் 37 பேருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து கடந்த மாதம் ஜோ பைடன் உத்தரவிட்டிருந்தார்.

அவர்கள் செய்த கொலை கண்டிக்கத்தக்கதாக இருப்பினும் மத்திய அளவில் மரண தண்டனை விதிக்கப்படுவது தவறு என்பதால் அவர்களுக்கான தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைப்பதாக பைடன் கூறினார்.

கடந்த 2003 முதல் மத்திய நீதிமன்றதனால் விதிக்கப்படும் மரண தண்டனைகள் நிறைவேற்றப்படாமல் இருந்த நிலையில் 2016 இல் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் அதை செயல்பாட்டுக்கு கொண்டு வந்தார்.

நாளை மறுதினம் முதல் டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவியேற்க உள்ளார் என்பதால் அவரிடம் இருந்து மரண தண்டனை கைதிகளை பாதுகாக்க ஜோ பைடன் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்.

பக்கங்கள் 03

கனடா முரசு

சனிக்கிழமை 18/01/2025

## இசை நிகழ்ச்சி நுழைவுச்சீட்டு மோசடியில் ஈடுபட்டவர் கைது

கனடாவில் பிரபல இசைக் கலைஞர் டெய்லர் ஷிப்டின் இசை நிகழ்ச்சிக்கு நுழைவுச் சீட்டு வழங்குவதாக பலர் ஏமாற் றப்பட்டுள்ளனர்.

03




# பாரிய தொகையிலான வரிகள் விதிக்கப்படும்

## அமெரிக்காவை எச்சரிக்கும் கனடா

தங்கள் மீது கூடுதல் வரிகளை விதித்தால் பதிலுக்கு பாரிய தொகையிலான வரிகளை விதிக்கவுள்ளதாக என கனடா அமெரிக்காவை எச்சரித்துள்ளது.

அத்தோடு, அமெரிக்காவிற்கு அனுப்பப்படும் அனைத்து விதமான மின்சாரம், எரிபொருள்களையும் இடைநிறுத்துவோம் என்றும் கனடா தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக பதவி யேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்ப், 4 முக்கியமான நாடுகளை அல்லது வேறு நாட்டின் பகுதிகளை அமெரிக்காவுடன் இணைக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

02

# வரி செலுத்தும் பிரஜைகளுக்கு கொடுப்பனவு வழங்கும் கனடா

கனடாவில் வரி செலுத்தும் பிரஜைகளுக்கு கொடுப்பனவு வழங்கவுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனடிப்படையில், கனடாவில் ஒன்றாரியோ மாகாணத்தைச் சேர்ந்த பிரஜைகளுக்கே இவ்வாறு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே, இந்த கொடுப்பனவுத் தொகைக்கான காசோலை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மகாண அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கார்பன் வரிவிதிப்பு,

02





# 50,000 சர்வதேச மாணவர்கள் கல்லூரிகளுக்கு செல்லவில்லை

கல்வி கற்பதற்காக கனடாவுக்குச் சென்ற 50,000 மாணவர்கள் கல்லூரிகளுக்குச் செல்லவில்லை என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டின் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில், கனடாவிலுள்ள கல்லூரிகளில் சேர்வதற்காக கல்வி அனுமதி பெற்றவர்களில் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்லூரிகளில் சேரவில்லை என அந்தக் கல்லூரிகள் கனடாவின் புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பிடம் தெரிவித்துள்ளன.

கல்வி கற்பதற்காக அனுமதி பெற்றுவிட்டு கல்லூரிகளுக்கு வராத அந்த மாணவர்கள் எங்கே சென்றிருக்கக்கூடும் என்பது குறித்து நிபுணர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.



சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைவதற்கான வழியாக, கனடாவின் கல்வி அனுமதியை மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ளக்கூடும் என சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கல்வி அனுமதி பெற்ற அந்த மாணவர்கள், கனடாவில் வேலை தேடுவதற்காகவோ அல்லது கனேடிய குடியிருப்பு அனுமதி பெறுவதற்காகவோ ஒரு வாய்ப்பாக அதை பயன்படுத்திக்கொண்டிருக்கலாம் என முன்னாள் ஃபெடரல் பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

முறைப்படி அனுமதி பெறாத வெளிநாட்டு ஏஜண்டுகள் அல்லது புலம்பெயர்தல் ஆலோசகர்கள் இந்த கல்வி அனுமதிகளை தவறாக பயன்படுத்தக்கூடும் என புலம்பெயர்தல் சட்டத்தரணி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், கல்வி அனுமதி பெற்றுவிட்டு கல்லூரிக்குச் செல்லாமல் அமெரிக்கா செல்லுதல் போன்ற விடயங்களுக்காக பயன்படுத்துவதைத் தடுக்க சர்வதேச மாணவர்களை முன்கூட்டியே கல்லூரிக் கட்டணம் செலுத்தச் செய்வது போன்ற நடவடிக்கைகளை அறிமுகம் செய்ய வேண்டும் என துறைசார் நிபுணர்கள் அரசை வலியுறுத்தியுள்ளனர்.

## பாரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ட்ரம்பின் இந்த பட்டியலில் கனடாவும் சேர்க்கப்பட்டிருந்ததோடு, அதற்காக இராணுவ படைகளை களமிறக்கவும் தயார் என்று அவர் அறிவித்துள்ளார்.

இவ்வாறனதொரு பின்னணியில், கனடாவை அமெரிக்காவுடன் இணைக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்து, கூடுதல் வரிகளை விதிப்பதாகவும் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் ட்ரம்ப், கனடாவின் பொருட்களுக்கு எதிராக கூடுதல் வரி விதிக்க முடிவு செய்தால், அமெரிக்கா வால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு கடுமையான வரியை விதிப்போம் என்று கனடா எச்சரித்துள்ளது. இதேவேளை, இதற்கான ஆரம்பப் பட்டியலை கனடா ஏற்கனவே தயாரித்துள்ளதாகவும், அமெரிக்கா என்ன செய்கிறது என்பதைப் பொறுத்து கனடா அமெரிக்காவிற்கு கூடுதல் கட்டணங்கள் விதிக்கும் என்று என்று கனடா கூறியுள்ளது.

## வரி செலுத்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பணவீக்கம் வட்டி வீத அதிகரிப்பு மற்றும் உலக பொருளாதார நிச்சயமற்ற தன்மை போன்ற காரணிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்கில் அரசாங்கம் இவ்வாறு வரி செலுத்தும் பிரஜைகளுக்கு ஒரு கொடுப்பனவுத் தொகையை வழங்க தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில், தலா 200 டொலர்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டு 18 வயதை பூர்த்தி செய்த கனடிய பிரஜைகளுக்கு இந்த தொகை வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்வாறு கொடுப்பனவு வழங்குவதன் மூலம் அரசாங்கத்திற்கு மூன்று பில்லியன் டொலர்கள் வரையில் செலவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# வீட்டைக் கொளுத்திய குற்றச்சாட்டில் சிறுவன் கைது

கனடாவின் லோக்ஸோர் வீதியில் இடம்பெற்ற தீ விபத்துச் சம்பவம் தொடர்பில் 16 வயதான சிறுவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

விடொன்றுக்குத் தீ மூட்டிய குற்றச் சாட்டிலேயே அந்த சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விபத்தினையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் தீயணைப்பு படையினருடன் இணைந்து தீயைக் கட்டுப்படுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தீவிபத்தினால் மேற்படி வீடு கடுமையாகச் சேத மடைந்துள்ளதாகவும், நாயொன்று காயமடைந்த நிலையில் மீட்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



## இசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு மோசடியில் ஈடுபட்ட மற்றுமொரு நபரை கனடிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முகநூலில் போலியாக பிரச்சாரம் செய்து இந்த நுழைவுச்சீட்டு விற்பனை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நுழைவுச்சீட்டு மோசடியின் மூலம் சுமார் 70 ஆயிரம் டொலர்கள் மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த இசை நிகழ்ச்சிக்கான நுழைவு சீட்டுகள் ஏற்கனவே விற்று தீர்ந்த காரணத்தினால் வேறு நபர்கள் மூலம் நுழைவுச்சீட்டை பெற்றுக் கொள்வதற்கு பலர் முயற்சித்துள்ளனர்.

இவ்வாறு மேற்கொண்ட முயற்சிகளின் போது பலர் மோசடிகளில் சிக்கியதாக தெரிவிக்கப்படுகிறது

இவ்வாறு மோசடியில் ஈடுபட்ட மற்றுமொரு நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

டேவிட் லைடு பிரேக் என்ற 56 வயதான பெர்லிங்டனை சேர்ந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சந்தேக நபருக்கு எதிராக சுமார் 19 குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டுள்ளன.